**செய்தி வெளியீடு எண்: 670** **நாள்:16.09.2020**

## <u>செய்திக்குறிப்பு</u>

தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் உறுப்பு கல்லூரிகள், அண்ணாமலை பல்கலைக்கழகம் மற்றும் சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் சேர விழையும் மாணாக்கர்களுக்கான இணையதள பதிவு முடிவடைந்து, பதிவு செய்த அனைத்து மாணாக்கர்களுக்கும் சமவாய்ப்பு எண் (Random Number) **26.08.2020** அன்று வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, கொரோனா நோய்த்தொற்று (COVID – 19) சூழ்நிலையின் காரணமாக மாணாக்கர்களை நேரில் அழைக்காமல் பதிவேற்றம் செய்யப்பட்ட சான்றிதழ்களை பொறியியல் சேர்க்கை சேவை மையங்கள் வாயிலாக திறம் பெற்ற பேராசிரியர்கள், வருவாய்த் துறை அலுவலர்கள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர், முன்னாள் இராணுவத்தினர் நல அலுவலர் மற்றும் மாவட்ட விளையாட்டு அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்புடன் சான்றிதழ்களின் உண்மைத்தன்மை சரிபார்க்கப்பட்டு வருகிறது. பெரும்பான்மையான மாணாக்கர்களின் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. இன்னும் சில மாணாக்கர்கள் சரியாக சான்றிதழ் பதிவேற்றம் செய்ய கால அவகாசம் கோரியுள்ளதால், மாணாக்கர்களின் நலன் கருதி **17.09.2020** அன்று வெளியிடப்பட வேண்டிய தரவரிசைப்பட்டியல் **25.09.2020** அன்று வெளியிடப்படும் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும், மாணாக்கர்கள் www.tneaonline.org என்ற இணையதளத்தில் தங்களின் account-ல் login செய்து தங்களது சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு விட்டதா என்பதை உறுதிசெய்து கொள்ளலாம். மாணாக்கர்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருப்பின் **044-22351014** மற்றும் **044-22351015** என்ற தொலைபேசி எண்களில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

கே.பி. அன்பழகன்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**